

அந்த மேய்ச்சல் நிலத்தில் வளர்கின்ற எல்லாக் காளைகளையும் போலில்லை பெர்டினன். நெட்டிமர நிழலில் அமர்ந்து பூக்களின் நறுமணத்தை நுகர விரும்புகிற வித்தியாசப் பிறவி. ஆனால் சந்தர்ப்பமும் சூழ்நிலையும் பெர்டினனை ஸ்பெயின் தலைநகர மெட்ரிடில் நடைபெறும் காளைச் சண்டையில் கொண்டுபோய் நிறுத்துகிறது. என்ன செய்திருக்கும் பெர்டினன்? கதையைப் படியுங்கள்!

0027490

thamizhbooks.com பாரதி புத்தகாலயம் புதிய புத்தகம் பேசுது



BOOKS FOR CHILDREN

உலகப் புகழ்பெற்ற சிறார் சித்திரக்கதை

கதைப் புதையல் Treasure trove of tales

The Story of Ferdinand


Munro Leaf

பெர்டினன்

(கன்றுக்குட்டியின் கதை)

மன்ரோ லீப்

தமிழில்: கொ.மா.கோ.இளங்கோ




பெர்டினன்


(கன்றுக்குட்டியின் கதை)

The Story of Ferdinand

மன்ரோ லீப்

தமிழில்: கொ.மா.கோ.இளங்கோ






FERDINAN (In Tamil)
English Original : The Story of Ferdinand
Munro Leaf
Tamil Translation: **Ko. Ma. Ko. Elango**
Thanks to: BGVS, Arvind Gutpa
Illustrations by **Richard Lawson**
First Edition: September, 2015

Published by

BOOKS FOR CHILDREN
im print of Bharathi Puthakalayam
7,Elango Salai, Teynampet, Chennai - 600 018
Email: thamizhbooks@gmail.com | www.thamizhbooks.com

பெர்டினன்
மன்ரோ லீப்
ஓவியம் : ரிச்சர்டு லாசன்
தமிழில்: **கொ.மா.கோ. இளங்கோ**
முதல் பதிப்பு: செப்டம்பர், 2015

வெளியீடு:



புக்ஸ் ஃபார் சில்ரன்
பாரதி புத்தகாலயத்தின் ஓர் அங்கம்
7, இளங்கோ சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
தொலைபேசி : 044 24332424, 24332924, 24356935

விற்பனை உரிமை




7, இளங்கோ சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
திருவல்லிக்கேணி: 48, தேரடி தெரு | **திருவான்மியூர்:** 1, 100அடி சாலை, தரமணி
பெரம்பூர்: 52, கூக்ஸ் ரோடு | **ஈரோடு:** 39, ஸ்டேட் பாங்க் சாலை
திண்டுக்கல்: 3சி18, எல்.பி.ஜி. காம்பவுண்ட் | **நாகை:** 1, ஆரியபத்திரபிள்ளை தெரு
திருப்பூர்: 447, அவினாசி சாலை | **திருவாரூர்:** 35, நேதாஜி சாலை
சேலம்: 36/1 அத்வைத ஆஸ்ரமம் சாலை | **மயிலாடுதுறை:** 147, பட்டமங்கலத் தெரு
அருப்புக்கோட்டை: 31, அகமுடையார் மகால் | **புதுக்கோட்டை:** வடக்கு ராஜா வீதி
மதுரை: 37A, பெரியார் பேருந்து நிலையம் | **மதுரை:** சர்வோதயா மெயின்ரோடு, மகபூப்பாளையம் | **குன்னூர்:** N.K.N வணிகவளாகம் பெட்போர்ட்
செங்கற்பட்டு:1 டி., ஜி.எஸ்.டி சாலை | **விழுப்புரம்:** 26/1, பவானி தெரு
திருநெல்வேலி: 25A, ராஜேந்திரநகர் முதல் தெரு, | **விருதுநகர்:** 131, கச்சேரி சாலை
கும்பகோணம்: 352, பச்சையப்பன் தெரு | **வேலூர்:** S.P. Plaza 264, பேஸ் II, சத்துவாச்சாரி
நெய்வேலி: பேருந்து நிலையம் அருகில், சிஐடியு அலுவலகம்
தஞ்சாவூர்: காந்திஜி வணிக வளாகம் காந்திஜி சாலை | **தேனி:** 12,பி, மீனாட்சி அம்மாள் சந்து, இடமால் தெரு | **கடலூர்:** பாரதி பஜார், பழைய அண்ணா மேம்பாலம்
நாகர்கோவில்: ரப்ஷா காம்ப்ளக்ஸ், தெற்குதோப்பு வணிகர்தெரு, மீனாட்சிபுரம்
கோவை: 77, மசக்காளிபாளையம் ரோடு, பீளமேடு | **திருச்சி:** வெண்மணி இல்லம், கரூர் புறவழிச்சாலை | **திருவண்ணாமலை:** முத்தம்மாள் நகர், ITI opp. வேங்கிக்கால்

நினைத்த நூல்கள்... நினைத்த நேரத்தில்...



ரூ.30/-
அச்சு: கணபதி எண்டர்பிரைசஸ், சென்னை - 5




முன்னொரு காலத்தில்
ஸ்பெயின் நாட்டில் நடந்த கதை.

Once upon a time in Spain.



அங்கொரு காளைக்கன்று வசித்துவந்தது.
அதன் பெயர் பெர்டினன்.

There was a little bull
and his name was Ferdinand.



பெர்டினன் வளர்ந்த மேய்ச்சல் நிலத்தில், மேலும் பல காளைக்கன்றுகள் வசித்தன. அவை ஓடிக்குதித்து விளையாடின. மகிழ்ச்சியாக வாழ்ந்தன. ஒன்றையொன்று தலையால் முட்டிக் கொண்டன. ஆனால், பெர்டினன் அவற்றுடன் விளையாட ஒருபோதும் ஆர்வம் காட்டியதில்லை.

All the other little bulls he lived with would run
and jump and butt their heads together,
but not Ferdinand.



அது, அமைதியாக வாழ விரும்பியது.
மேலும், அழகிய பூக்களின் நறுமணத்தை முகரவே ஆசைப்பட்டது.

He liked to sit just quietly and smell the flowers.




பெர்டினனுக்கு விருப்பமான இடம் ஒன்று உள்ளது. அந்த இடம் மேய்ச்சல் நிலத்தில் வளர்ந்துள்ள நெட்டிமரத்தின் நிழல் என்பது பலருக்குத் தெரியாது.

அதற்கு மேய்ச்சல் நிலத்தில் மற்ற மரங்களைவிட நெட்டிமரம் பிடித்திருந்தது.

பகல்நேரம் முழுக்க அந்த மரநிழலில் ஓய்வெடுக்கவே பெர்டினன் ஆசைப்பட்டது.

மரத்தின் நிழலில் அமர்ந்து மரத்தில் பூத்த அழகிய பூக்களின் வாசனையை முகர்ந்து கொண்டிருந்தது.

He had a favorite spot out in the pasture under the cork tree.It was his favorite tree and he would sit in its shade all day and smell the flowers.



மகன் மரத்தடியில் அமர்ந்து பூக்களை முகர்வதை தாய்ப்பசு கவனித்தது. தாய்ப்பசுவுக்கு மகனைப்பற்றிய கவலை. பெர்டினன் தனிமையை விரும்புவதால் அவனது எதிர்காலம் என்னாகுமோ என்ற பயம் அம்மாவுக்கு இருந்தது.

Sometimes his mother, who was a cow, would worry about him.

She was afraid he would be lonesome all by himself.



அம்மா கேட்டது:


"நீ ஏன் மற்ற காளைகளோடு ஓடிக்குதித்து விளையாடுவதில்லை? தலையால் முட்டிக் குதிப்பதில்லை. ஏன் இப்படி தனித்திருக்கிறாய்?"

உடனே, பெர்டினன் 'மாட்டேன்' என தலையை அசைத்தது. பிறகு, பதில் சொன்னது:

"இந்த அமைதியான சூழலில் வாழ விரும்புகிறேன். மரநிழலில் உட்கார்ந்து பூக்களின் வாசனையை முகர்வது எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது."


"Why don't you run and play with the other bulls and skip and buttYour head?" she would say. But Ferdinand would shake his head.

"I like it better here where I can sit quietly and smell the flowers."



இந்த பதிலைக் கேட்டு, பெர்டினன் தனிமையில் சிக்கித் தவிக்கவில்லை என்பதை தாய்ப்பசு புரிந்துகொண்டது.
அன்றுமுதல் பெர்டினனை நெட்டிமர நிழலில் உட்கார அனுமதித்தது.
பிள்ளையின் மகிழ்ச்சி, பெற்று வளர்த்த தாய்க்கு நம்பிக்கை தந்தது. கடைசியில் அவனுக்கு வாழ்த்துக்கூறி திரும்பிச்சென்றது.

His mother saw that he was not lonesome,
and because she was an understanding mother,
even though she was a cow,
she let him just sit there and be happy.



நாட்கள் நகர்ந்தன. பல வருடங்கள் கழிந்தன. பெர்டினன் பெரியவனாகவும் பலசாலியாகவும் வளர்ந்திருந்தது.

As the years went by Ferdinand grew
and grew until he was very big and strong.



சிறுவயதில் பெர்டினன் வாழ்ந்த மேய்ச்சல் நிலத்தில் ஓடி விளையாடிய மற்ற காளைகளும் பெரிதாக வளர்ந்திருந்தன. அவை, நாள்முழுக்க ஒன்றோடு ஒன்று சண்டையிட்டுக்கொண்டன.

தலையில் வளர்ந்த கொம்புகளால் நண்பர்களை முட்டி விளையாடின. அவற்றுக்கு வேறுஒரு ஆசையும் இருந்தது.

ஸ்பெயின் நாட்டு தலைநகர் மெட்ரிட். அங்கு நடக்கும் காளைச்சண்டை போட்டிகளில் கலந்துகொள்ள ஆர்வம் கொண்டிருந்தன. அதற்கான பயிற்சியில் தீவிரமாக ஈடுபட்டன.

All the other bulls who had grown up with him in the same pasture would fight each other all day.

They would butt each other and stick each other with their horns. What they wanted most of all was to be picked to fight at the bull fights in Madrid.

But not Ferdinand - he still liked to sit just quietly under the cork tree and smell the flowers.



ஆனால், பெர்டினன் மனதில் அந்த ஆசை இல்லை.


வழக்கம்போல நெட்டிமரத்து நிழலில் அமர்ந்து பூக்களின் வாசனையை மட்டுமே முகர விரும்பியது.

அன்றொரு நாள், ஐந்து மனிதர்கள் மேய்ச்சல் நிலத்துக்கு வந்தார்கள். அவர்கள் வித்தியாசமான தொப்பிகள் அணிந்திருந்தார்கள்.

பெரிய உருவம் கொண்ட பலசாலியான காளையை தேர்ந்தெடுக்க அவர்கள் வந்திருந்தார்கள்.

தேர்வுசெய்த காளையை காளைச்சண்டைக்கு கொண்டுசெல்ல நினைத்தார்கள்.

One day five men came in very funny hats to pick the biggest, fastest, roughest bull to fight in the bull fights in Madrid.





ஐந்து விருந்தாளிகளுக்கு எதிரில் மற்றகாளைகள்
சீறிப்பாய்ந்து சண்டையிட்டுக்கொண்டன.

குதித்து விளையாடின. ஒன்றையொன்று கொம்பால்
முட்டிச்சாய்த்து பலத்தை வெளிக்காட்டின.

காளைச்சண்டைக்கு தேர்வு பெறவேண்டும் என்ற
ஆசையில் கடுமையாக சண்டையிட்டன.

**All the other bulls ran around snorting and butting,
leaping and jumping so the men would think that they
were veryvery strong and fierce and pick them.**



தன்னை யாரும் காளைச்சண்டைக்கு தேர்வுசெய்ய
மாட்டார்கள் என பெர்டினன் நினைத்தது. வழக்கம் போல
நெட்டிமரத்தடிக்குச் சென்று அமர்ந்தது.


**Ferdinand knew that they wouldn’t pick him
and he didn’t care.
So he went out to his favorite cork tree to sit down.**



நெட்டிமர நிழலில் அழகான புல்வெளியைத் தேடி
உட்கார்ந்திருக்கலாம்.

ஆனால் அங்கொரு எதிர்பாராத ஆபத்து காத்திருந்தது.
அது ஒரு குளவி!யின் மீது உட்கார்ந்தது.

He didn’t look where he was sitting and instead of sitting on the nice cool grass in the shade he sat on a bumble bee.



நாம் ஒரு குளவியாக இருந்து நம்மீது ஒரு காளை வந்து
உட்கார்ந்தால் நாம் என்ன செய்வோம்?

கொடுக்கை வைத்து காளையைக் கொட்டி
இருப்போம்தானே! அங்கு நடந்ததும் அதே கதைதான்.

Well, if were a bumble bee and a bull sat on you what would you do?

You would sting him.

And that is just what this bee did to Ferdinand.




ஐயோ! பாவம். பெர்டினனுக்கு சுள்ளென்று வலித்தது.
பெர்டினன் தாமதிக்கவில்லை. எகிறிக் குதித்தது. கடுமையான
வலியின் காரணத்தால் நிலைதடுமாறி ஓடியது.
கால் நகத்தால் நிலத்தை உரசித் தேய்த்தது.
நெட்டிமரத்தைச் சுற்றி தலைதெறிக்க ஓட்டம் பிடித்தது.

Wow! Did it hurt! Ferdinand jumped up with a snort. He ran around puffing and snorting, butting and pawing the ground as if he were crazy.




அங்கு வந்திருந்த ஐவரும் அக்காட்சியை வியப்போடு
பார்த்தார்கள். தங்களுக்குள் கைத்தட்டி உற்சாகமாகக்
கொண்டாடினார்கள். மற்ற காளைகள் மிரளும்
அளவுக்கு தாக்குதல் நடத்தும் வலிமை அதற்கு
உண்டென நம்பினார்கள். தலைநகரில் ஏற்பாடு செய்த
காளைச்சண்டைக்கு ஏற்றகாளை பெர்டினன்தான்
என்று முடிவு செய்தார்கள்.

The five men saw him and they all shouted with joy. Here was the largest and fiercest bull of all. Just the one for the bull fights in Madrid.




எனவே, பெர்டினனை மாட்டுவண்டியில் ஏற்றிக்கொண்டு
தலைநகர் நோக்கி விரைந்தார்கள்.

So they took him away for the bull fight day in a cart.



ஊரே விழாக்கோலம் கொண்டிருந்தது.
எங்கும் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.
ஆங்காங்கே இசைக்கருவிகள் ஒலிக்க கொண்டாட்டம்
களைகட்டி இருந்தது. ஸ்பெயின் நாட்டில் காளைச்சண்டை
ஒரு கலைநிகழ்ச்சியாகவே கொண்டாடப்பட்டது.
திருவிழா காணவந்த பல பெண்கள் அழகிய
வாசனைப் பூக்களால் தலையை
அலங்கரித்து வந்திருந்தார்கள்.

What a day it was!
Flags were flying, bands were playing...
and all the lovely ladies had flowers in their hair.




காளைச்சண்டை நடக்கவிருந்த மைதானத்தில் சிறப்பு அணிவகுப்பு ஆரம்பமானது.

They had a parade into the bull ring.



முதலில் வாத்தியக்குழு சிப்பாய்கள் மைதானத்தில் நுழைந்தார்கள். அவர்கள் கைகளில் கூர்மையான ஊசிகள் வைத்திருந்தார்கள். அவை வண்ண ரிப்பன்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. காளைச்சண்டை ஆரம்பமாவதற்கு முன்பு ஊசிகளை வைத்து காளையின் கழுத்து மற்றும் உடம்பில் குத்துவார்களாம். இப்படித்தான் காளையை கோபம்கொள்ளச் செய்வார்களாம்.

First came the Banderilleros with long sharp pins with ribbons on them to stick in the bull and make him mad.




அடுத்ததாக குதிரைகளின் மீதேறி வீரர்கள் வந்தார்கள்.
அவர்கள் நீளமான ஈட்டிகளைப் பிடித்திருந்தார்கள்.
காளைச்சண்டை ஆரம்பமாவதற்கு முன்பு காளையின் மீது
ஈட்டி எரிந்து தாக்குவார்களாம். ஏனென்றால், போட்டியில்
கலந்துகொள்ளும் காளை கடுஞ்சினம் கொண்டு
சீறிப்பாயவேண்டும் என்பது விளையாட்டின் ஒரு விதிமுறை.

Next came the Picadores who rode skinny horses and they had long spears to stick in the bull and make him madder.



கடைசியில் விளையாட்டு வீரர் மைதானத்துக்கு வந்தார்.
அவர் மிகவும் பெருமைக்கு உரியவராக கருதப்பட்டார்.
சிகப்புத் தொப்பியும் மேலங்கியும் அணிந்திருந்தார்.
இடுப்பில் உடைவாள் செருகி இருந்தார்.
காளைச்சண்டை போட்டியின் முடிவில் வாளை எடுத்து
காளையின் கழுத்தை வெட்டிக் கொன்றுவிடுவார்.
இது விளையாட்டின் வழக்கமாக இருந்தது.

Then came the Matadoe, the proudest of all - he thought he was very handsome, and bowed to the ladies. He had a red cape and a sword and was supposed tostick the bull last of all.




பார்வையாளர்களின் பலத்த கைத்தட்டலுக்கு மத்தியில் பெர்டினன் மைதானத்துக்கு வந்தது. அது நமக்கு முன்பே அறிமுகமான காளை. அல்லவா!

Then came the bull,
and you know who that was don’t you? Ferdinand.



பெரும் கோபத்தோடு நுழைந்த பெர்டினனைப் பார்த்து அனைவருமே பயந்து விட்டார்கள். சிப்பாய்கள் பதறிப்போனார்கள். குதிரை வீரர்கள் அஞ்சி நடுங்கினார்கள். கடைசியில் வந்த விளையாட்டு வீரர் குழப்பிப்போனார்.

They called him Ferdinand the Fierce and all the Banderilleros were afraid of him and the Picadores were afraid of him and the Matadors were scared stiff.



பெர்டினன் தாவிக்குதித்து மைதானத்தின் நடுப்பகுதிக்கு ஓடியது. பார்வையாளர்கள் மத்தியில் பலத்த கைத்தட்டல் ஒலி எழுந்தது. மக்கள், கூக்குரல் எழுப்பி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள்.

விளையாட்டு வீரரை பெர்டினன் கொம்பால் முட்டித் தூக்கியெறியும் என உறுதியாக நம்பினார்கள்.

Ferdinand ran to middle of the ring and everyone shouted and clapped because they thought he was going to fight fiercely and butt and snort

and stick his horns around.



ஆனால், பெர்டினன் மூர்க்கமாக நடந்துகொள்ளவில்லை. மைதானத்துக்கு நடுவில் வந்துநின்று சுற்றுமுற்றும் பார்த்தது.

அங்கு வந்திருந்த பல பெண்கள் வாசனைப் பூக்களால் தலையலங்காரம் செய்திருந்தார்கள்.

அது, பூக்களின் நறுமணத்தை முகர்ந்தபடி அமைதியாக ஆடுகளத்தில் உட்கார்ந்தது.

But not Ferdinand.

When he got to middle of the ring he saw flowers in all the lovely ladies' hair

and he just sat down quietly and smelled.



காளைச்சண்டையில் கலந்து கொள்ளக்கூடாது என்று
பெர்டினன் உறுதிகொண்டது. சாந்தமாக உட்கார்ந்திருந்தது.
அதைக்கண்டு சிப்பாய்கள் கோபம் கொண்டார்கள்.
குதிரை வீரர்கள் குழம்பிப்போனார்கள்.

மேலங்கியும் உடைவாளும் அணிந்துவந்த வீரர் மனம்
உடைந்து அழத் தொடங்கினார்.

இனி, மக்கள் மத்தியில் சிகப்புத் தொப்பியை தூக்கி
எறிந்து வெற்றியைக் கொண்டாட முடியாது.

உடைவாளுக்கு வேலை இல்லாமல்போனது.
அதற்காக அவர் கவலைப்பட்டார். பெர்டினன்
அதிர்ஷ்டவசமாக சாவின் பிடியிலிருந்து தப்பித்தது.

He wouldn't fight and be fierce no matter what they did. He just sat and smelled. And the Banderilleros were mad and the Picadors were madder and the Matador was so mad he cried.




காளைச்சண்டை வீரர் தோற்றுப்போனார்.

கடைசியில், பெர்டினனை அது வசித்த மேய்ச்சல்
நிலத்திலேயே கொண்டுபோய் விட்டுவிட முடிவு
செய்தார்கள். அதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்கள்.
காளையை வண்டியில் ஏற்றி அனுப்பி வைத்தார்கள்.

because he couldn't show off his cape and sword. So they had to take Ferdinand home.





எனக்குத் தெரிந்தவரையில் பெர்டினன் இன்றும்கூட
அதே நெட்டிமரத்தடியில் உட்கார்ந்திருக்கிறது.
மரத்தடி நிழலில் உட்கார்ந்து பூக்களின் வாசத்தை
முகர்ந்து கொண்டிருக்கிறது.
மிகவும் மகிழ்ச்சியாக வாழ்ந்துகொண்டிருக்கிறது.

And for all I know he is sitting there still, under his favorite cork tree,smell the flowers just quietly.

He is very happy.

■■■